### 3. விளக்கப் படங்களும் அமைப்புத்திட்டமும் வடிவமைப்புக்கான வழிமுறைகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

- மேற்படி கருத்துரைகளை மேலும் பல வினாக்களாக எளிமையாக விரிவாக்கலாம்: விளக்கப்படங்களுடன் தெளிவாகவும் எளிதாகவும் படிப்பதற்கு எழுத்துருவினை நாம் எவ்வாறு ஆக்கலாம்? எந்த வடிவமைப்பும் அமைப்புத்திட்டமும் எழுத்துருவினை மேம்படுத்தும்?
- தன்வயச் செயன்முறைத் தேர்வுகளுக்கும், பயன்படுத்திப்பார்த்தல் முயற்சிகளுக்கும் (கணினியிலும்) உறுதியாக ஊக்குவிக்கவேண்டும். மேற்படி கருத்துகளுக்கு மேலாக, புனைகதையற்ற எழுத்துருக்களுடன் தொடர்பாக மாணவர்கள் தம்முள் ஆக்கும் பணிப்புத்தகங்கள் மற்றும் எடுத்துரைப்புகள் இத்தேவைக்கு ஏற்றனவாகலாம்.

---

# 11 எழுத்துருவை மீள் நோக்குக்கும் திருத்தத்துக்குமான உத்திகள்

**இலக்கு**

மாணவர்கள் தங்கள் எழுத்துருக்களை மேம்படுத்த அவற்றை எவ்வாறு மீள்பார்வை செய்யலாம், மதிப்பாய்வு செய்யலாம் என்பது பற்றிக் கற்கவேண்டும். இது ஒரு பக்கம் பொருளுடனும் (தெளிவு, அளவையியற் கட்டமைப்பு, படிப்பவர்க்கு கவர்ச்சியான எடுத்துரைப்பு) மறுபக்கம் எழுத்துருவின் முறைமையான பண்புகளுடனும் (இலக்கணம், தொடரியல், சரியான வடிவங்கள்) தொடர்புடையதாகும். எழுத்துருக்களின் ஊன்றிய நோக்கும், மதிப்பாய்வும் கணிப்பு நிலையும் அவர்களுடைய முதல் மொழியின் எழுத்து வடிவம் பற்றிய பொதுவான விழிப்புணர்வு ஆகியவற்றில் மாணவர் தகைமையினை முன்னேற்றுகின்றன. தனியாக எழுத்துருவை மீட்டல் செய்வதிலும் இச்செயற்பாட்டில் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுதலும் விரும்பத்தக்கவை, ஏனெனில் ஊடகத் தொடர்பாடலூடாக மொழி விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது, இதன் பக்கநிலையாக, இரண்டு அல்லது மூன்று மாணவர்களின் மொழியியல் வளங்கள் நன்மைபயப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன.

### 1. குழுவாக செயற்பட்டு எழுதுதலும் மீள்நோக்குதலும்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உசாத்துணை நூல்களும் அகரமுதலிகளும்

எழுத்துருவைத் தொகுக்கும் இவ்வூடாட்டச் செயற்பாடு பெருமளவு மாணவர்களுக்கு அவர்களுடைய வழக்கமான வகுப்புகளிலிருந்து அறிந்திருப்பர். மேலும், குறிப்பாக இது பாரம்பரியமொழியில் கற்பிப்பதற்கு நன்கு பொருத்தமானது. ஏனெனில் இது எழுத்துமொழி விழிப்புணர்வை மற்றும் தகைமையை ஊக்குவிக்கிறது,

அ) இப்பணிக்கு முன்தேவையாக மாணவர்கள் ஓர் எழுத்துருவினை (ஒரு பக்கத்துக்கு மேற்படாமை விரும்பத்தக்கது) உருவாக்கியிருக்க வேண்டும். தங்கள் எழுத்துருவை முடித்தவர்கள், உரத்துப் படித்துப் பயிற்சி செய்யவும். பின்னர் அவர்கள் ஒன்று அல்லது இரண்டு பங்காளிகளைத் தேடுவர், அவர்களுடன் வரைபுகளைப் பயிற்சி செய்வதுடன் மேம்படுத்துவதையும் செய்வர். (வேறுபாடு: பதிப்புக் குழுவினை ஆசிரியர் உருவாக்குவார்).

ஆ) மாணவர்கள் முறைப்படி, குழுவிலுள்ள மற்றவர்களுக்கு முழு எழுத்துருவையும் மெதுவாக வாசித்து, பின்வரும் வினாக்களையும் முன்வைப்பர் (அவற்றைப் பலகையில், தாள் துண்டுகளில் எழுதலாம், அல்லது பிரதிகளை வழங்கலாம்). நீர் எழுத்துருவை விளங்கிக்கொண்டீரா? தெளிவாக்குதற்கு எனக்கு என்ன தேவை? எது நன்று?, எது அவ்வளவு நன்றாயில்லை? படிப்பவர் பின்னர் கிடைத்த பின்னூட்டல் பற்றிய குறிப்புகளை எடுப்பார்.

இ) அடுத்து, ஒவ்வொரு வாக்கியமாக, எழுத்துரு, மதிப்பாய்வு செய்யப்படும். இந்நிலையில் உள்ள வினாக்கள்: வாக்கியம் தெளிவாகவும் விளங்கக்கூடியதாகவும் உள்ளதா? மொழியியலடிப்படையில் இது சரியா (வடிவமும் கட்டமைப்பும்)? ஒரு கருத்தை விளக்க மிக நல்ல சொற்கள் இருக்கின்றனவா? (சரிபார்க்க ஓர் அகரமுதலியைப் பயன்படுத்துக!).

ஈ) அடுத்து, இன்னொரு மாணவனின் / மாணவியின் முறை ஆகும்.

உ) குழுவின் எல்லா எழுத்துருக்களும் கலந்துரையாடியபோது, மாணவர்கள் தம் எழுத்துருவின் மேம்படுத்தப்பட்ட பதிப்பினை எழுதுவர். இந்நிறைவுப் பதிப்புகள் ஆசிரியரின் குறிப்புகளுடன் திருத்தப்படும். முடிவில், எல்லா மாணவர்களுக்கும் எழுத்துருக்கள் கிடைக்கச் செய்யவேண்டும். (கீழே பார்க்கவும் # 12: இலக்கு வாசிப்பாளர் குறிப்பு)

---

## 2. தனியாக ஓர் எழுத்துருவை மீள்நோக்குதல் (பின்னர் அதுபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடல்)

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உசாத்துணை நூல்களும் அகரமுதலிகளும்

மற்றைய மாணவர்களுடன் இணைந்து எழுத்துரு பற்றி ஒரு கூட்டாகக் கலந்துரையாடும் வாய்ப்புகள் இல்லாதவிடத்து தனியாகவே ஓர் எழுத்துருவைப் பதிப்பித்தல் இன்றியமையாததாகும். (எ.கா. வீட்டு வேலையாக எழுத்து ஒப்படைகளில் ஈடுபடும்போது) எப்படியிருப்பினும் வாய்ப்புள்ளபோது, மாணவன் / மாணவி புறநிலைப் பின்னூட்டலைப் பெறவேண்டும் (பெற்றோர், உடன்பிறப்புகள், ஆகியோரிடமிருந்து) தனியாக தம் எழுத்துருக்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடும் மாணவர்களுக்கு பின்வரும் தெளிவான வழிகாட்டிகள் மற்றும் துணைசெய் வினாக்கள், மதியுரைகள் என்பவற்றை வழங்குவது இன்றியமையாததாகும்:

- என் எழுத்துருவின் தலைப்பை இன்னும் சுவையானதாகவும் உணர்வூட்டுவதாகவும் ஆக்குதற்கு அல்லது பொருள் பற்றிய தெளிவான அறிகுறியை வழங்குதற்கு நான் மீள் முறைப்படுத்தலைச் செய்யலாமா?
- என் எழுத்துரு தெளிவான கட்டமைப்பையுடையதா (முன்னுரை / கண்ணோட்டம், தலையாய உள்ளுடல், முடிவு / சுருக்கம்)? வளர்ச்சியடைதல் தர்க்கரீதியானதா? தலைப்புக்குள் நின்றுள்ளேனா?
- எழுத்துரு, படிப்பவரின் விருப்பினைக் கவருவதாக, சுவையான தகவலுள்ள வாக்கியத்துடன் தொடங்குகின்றதா?, அல்லது இதனை மேம்படுத்தமுடியுமா?
- மிகுதியாக மீண்டும் மீண்டும் கையாளாத தெளிவான சுருக்கமான சொற்களை நான் தேர்ந்தெடுத்துள்ளேனா?
- எனக்குத் தெளிவில்லாத இலக்கண வடிவங்கள் (காலங்கள், வினைவடிவங்கள்) உண்டா? யாரிடம் நான் அறிவுரை கேட்கலாம்? (இப்பகுதிகளைக் குறித்துவைத்து ஆசிரியரிடமிருந்து உதவி பெறலாம்.)
- என் எழுத்துரு சொல்லெழுத்துப் பிழைகளற்றதா, அகரமுதலிகளின் துணையுடன் ஐயங்களைத் தெளிவாக்கிக்கொண்டேனா? (அகரமுதலிகள் முதலியனவற்றை மாணவர்கள் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும், அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. பள்ளி மொழியின் நெடுங்கணக்குக்கு எதிராக பாரம்பரியமொழியில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காண்பதற்கும், எழுத்துகளின் ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வுக்குமான உத்திகளை இது உள்ளடக்கியதாகும்.)